Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk
தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, JUNE 23, 2023
வெள்ளிக்கிழமை ஜூன் 23, 2023 | ஒளி: 09 கதிர்: 025 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## 67 டெங்கு வலயம்

67 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

அரசியல் தீர்வு விடயத்தில்

# பண்டிகைகளை காட்டி ஏமாற்றுகிறார் ஜனாதிபதி

**உரையாற்றுகையில் சொல்லுவதெல்லாம் பொய் என்கிறார் வினோ எம்.பி**

ஜனாதிபதி உரையாற்றும் ஒவ்வொரு முறையும் பொய்களையே கூறுகின்றார் என்றும் அரசியல் தீர்வு விடயத்தில் ஒவ்வொரு தைப்பொங்கல், தீபாவளி, புத்தாண்டில் தீர்வு என்று பொய் சொல்லி ஏமாற்றுகின்றார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வினோரதராதலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) நடைபெற்ற, அண்மையில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,



"ஜெனிவாவில் 53 ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் தற்போது நடைபெறுகின்றது. அந்த சபையின் பிரதி ஆணையாளரின் உரையில் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பொறுப்பு கூறலை உறுதிப்படுத்தாமல் தண்டனையில் இருந்து விடுபடும் போக்கு முடிவுக்கு கொண்டுவரப்படாமல், தொடர்ச்சியாக கடந்தகால விடயங்களை அலட்சியப்படுத்தும் போக்கை கண்டித்து உரையாற்றியுள்ளார். அந்த உரை தொடர்பில் தமிழ் மக்கள் சார்பில் பாராட்டுக்களை கூறிக்கொள்கின்றோம்.

தொடர்ச்சி P2



ஹெவிகென் மயக்க மருந்தை

## சிறுவர்களுக்கு வழங்குவதில்லை

**சபையில் அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு**

ஹெவிகென் என்ற மயக்க மருந்தை உண்மையில் சிறுவர்களுக்கு பயன்படுத்துவதில்லை என்றும் இரண்டு வைத்தியசாலைகளில் மாத்திரமே அது தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஹெவிகென் மயக்க மருந்து தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22), எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சீனாவுக்கு செல்கிறார் அமைச்சர் அலி சப்ரி

சீன வெளியுறவுத் துறை அமைச்சர் குயின் கேங்கின் அழைப்பை ஏற்று சீனாவுக்கான விஜயத்தை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மேற்கொள்ளவுள்ளார்.

ஜூன் 24 ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை அமைச்சர் அலி சப்ரி விஜயம் செய்யவுள்ளார் என்று சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புப் பொதியைத் தொடர்ந்து சீனா உட்பட சர்வதேச மற்றும் இருதரப்பு கடனாளர்களுடன் அரசாங்கம் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையில் ஈடுபட்டுள்ளதை அடுத்து இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2



அமைச்சர் கெஹலிய அதிரடி

## பதில் கிடைக்காவிடின் பதவியை துறப்பேன்

நிதி அமைச்சில் இடம்பெறும் கலந்துரையாடலின் மூலம் மருந்துப் பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டை சரி செய்துகொள்ள முடியாமல் போனால் தொடர்ந்தும் சுகாதார அமைச்சர் பதவியில் இருக்க மாட்டேன் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டில் மருந்து பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மருந்து பொருட்கள் கொண்டுவரும் நடவடிக்கை தொடர்பாக பெறுகை கோரல் தொடர்பில் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. அதனை குறைத்துக்கொள்ள அமைச்சரவையுடனும் பல சந்தர்ப்பங்களில் பேசினோம். அமைச்சரவையும் அதற்கு அனுமதி வழங்கியது.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்தில் உள்ளாடைகளை தலையால் போடுகின்றனர்



போது அரசாங்கம் என்ன கூறப்போகிறது. உள்ளாடைகளை அரசாங்கத்தில் அனைவரும் தலையாலேயே போட்டுக்கொண்டுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) நடைபெற்ற, ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அண்மையில் நிகழ்த்திய உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரேமதாச காலத்தில் நாட்டுக்கு டொலர்களை கொண்டுவருவதற்காக அமைக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகள் பல மூடப்படுகின்றன. அன்று திறக்கும் போது உள்ளாடை தொழிற்சாலைகள் திறக்கப்படுவதாக கூறினர். இப்போது மூடப்படும்

தொடர்ச்சி P2

அனைத்து மதங்களையும்

## மதிக்க வேண்டும்

**அவமதிக்கும் வகையில் செயற்பட முடியாது என்கிறார் சஜித்**

நாங்கள் அனைவரும் அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும் என்றும் எந்தவொரு மதத்தையும் தூண்டிவிடும் வகையில் செயற்படுவதற்கு எவருக்கும் முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இலங்கை மின்சார சபையை

## மறுசீரமைப்பை தவிர மாற்று வழி இல்லை



இலங்கை மின்சார சபை பாரிய நஷ்டத்தில் இயங்குவதால் அதனை மறுசீரமைப்பதை தவிர மாற்று வழியேதும் எமக்கு கிடையாது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான காவிந்த ஜயவர்தன எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மின்சார சபை இன்றளவில் 51 ஆயிரத்து 600 கோடிரூபாய் நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளது.

தொடர்ச்சி P2

பெருந்தோட்ட நிறுவன செயற்பாடு குறித்து

## ஜனாதிபதியுடன் பேசி விரைவில் தீர்மானம்



இலங்கையின் பெருந்தோட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி விரைவில் தீர்மானமொன்றை எடுக்க எதிர்பார்ப்பதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தமிழர்களின் இருப்பை அழிக்க

## அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது



■ நிதர்ஷன் வினோத்

தமிழர்களின் தொன்மைவாய்ந்த தொல்லியல்களை சிங்கள பௌத்தமாக மாற்றியமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தனது அரச இயந்திரத்தை சர்வாதிகாரமாக வழி நடாத்தி தமிழர்களின் இருப்பை அழிக்க பல முனைகளிலும் கங்கணம் கட்டி நிற்கிறது என்றும் குருந்தூர் மலையில் அப்பட்டமான அரச சர்வாதிகாரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகவும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ரூ.64 கோடி பெறுமதியான ஹெரோய்ன் சிக்கியது



64 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய 16 கிலோ 193 கிராம் ஹெரோய்ன் தொகையுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றுசுங்க ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் சுதந்த சில்வா தெரிவித்துள்ளார்.உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யும் போர்வையில் பாகிஸ்தானில் இருந்து குறித்த கிராம் ஹெரோய்ன் தொகை கொள்கலன் மூலம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து இயக்கப்படும் வைட் ஜூலியட் என்ற கப்பலில் கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் பதுக்கி வைத்திருப்பதாக சுங்க பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2

பேராதனை பல்கலைக்கழக விவகாரம்

## ஜனாதிபதியுடன் பேசி விரைவில் தீர்மானம்

**உடன் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து**




பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இந்த ஆண்டு நிறைவடைந்த இந்த காலப்பகுதியில் மாத்திரம் ஐந்து மாணவர்கள் தமது உயிர்களை மாய்த்துள்ளனர் என்றும் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்,

தொடர்ச்சி P2

## மேற்கிலும் தெற்கிலும் குற்றச்செயல்கள் உயர்வு

**கடும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டிரான் பணிப்புரை**



மேல் மற்றும் தென் மாகாணங்களில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் விசேட பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ரணிலின் தலைமையின் கீழான திட்டங்கள் சிறப்பாக உள்ளன



**செந்தில் தொண்டமானிடம் ஜப்பான் துணை அமைச்சர் தெரிவிப்பு**

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் சிறப்பாக உள்ளதாகவும் சர்வதேச நாணய நிதிய நிதி வசதியை பெற்றுக்கொள்வதற்கும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சிறுவர்களுக்கு வழங்குவதில்லை

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், "குறித்த மருந்து தொடர்பான இரண்டு மூன்று சம்பவங்கள் பேராதனை போதனா வைத்தியசாலை மற்றும் சிறுவர் வைத்தியசாலையிலும் இடம்பெற்றுள்ளன. அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட வைத்தியர்கள் அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

சிறுவர் வைத்தியசாலை சம்பவம் தொடர்பில் குறிப்பிடும்போது உண்மையில் அவ்வாறான மயக்க மருந்து சிறுவர்களுக்கு உபயோகப்படுத்தப்படவில்லை. அதன் பாதிப்புகளை கவனத்தில் கொண்டு அவற்றை சிறுவர்களுக்கு உபயோகிப்பதில்லை.

இரண்டு வைத்தியசாலைகளில் மாத்திரமே அது தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஏனைய எந்த ஒரு வைத்தியசாலையிலும் அது தொடர்பான பதிவுகள் கிடையாது என்றார்.

## சீனாவுக்கு செல்கிறார் அமைச்சர் அலி சப்ரி

இலங்கையுடனான தனது இருதரப்பு கடனை மறுசீரமைப்பது குறித்து சீனா முன்னதாக கவலை தெரிவித்த போதும் தொடர்ந்து ஆதரவளிப்பதாக உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைகளை காட்டி ஏமாற்றுகிறார் ஜனாதிபதி

இதேவேளை சர்வதேச விசாரணை பொறிமுறை விடயத்தில் தொடர்ந்தும் அரசாங்கம் ஏமாற்றுமாக இருந்தால் அந்த பொறிக்குள் இந்த அரசாங்கம் அகப்படுவதை தடுக்க முடியாது என்பதனையும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஐநா மனித உரிமைகள் ஆணையகம் கடந்த காலங்களில் எடுத்த முடிவுகளை நிறைவேற்றாது அரசாங்கம் இருக்குமாக இருந்தால் அதற்கான தண்டனை நிச்சயமாக கிடைக்கும். அதற்கு நாங்கள் பக்க பலமாக இருப்போம் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் ஜெனிவாவுக்காக இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி அதற்கு பதிலளிக்கையில் இங்கே அனைத்தும் சுமுகமாக நடைபெறுகின்றது என்றும் இராணுவத்தினரிடம் இருக்கும் காணிகளில் 98 வீதம் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வன்னியில் 98 வீதமான காணிகள் இன்னும் இராணுவத்திடமே இருக்கின்றன.

சிறியளவிலான காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மக்கள் இன்னும் மீளவும் குடியேறாது தவித்துக்கொண்டுள்ளனர். அரச படைகள் தேசிய பாதுகாப்பு என்ற ஒற்றை வசனத்தில் அங்கே இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி உரையாற்றும் ஒவ்வொரு முறையும் பொய்களையே கூறுகின்றார். அதேபோன்று ஜெனிவாவில் உள்ள வதிவிடப் பிரதிநிதியும் பொய்களையே கூறுகின்றார். எவ்வாறாயினும் மனித உரிமைகள் ஆணையகத்தையோ, சர்வதேச சமூகத்தை எந்த வகையிலும் ஏமாற்ற முடியாது என்பதனை கூறுகின்றேன். அடிக்கடி ஜனாதிபதி உரையாற்றுகின்றார். ஆனால் அவர் கூறுபவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை" என்றார்.

## 67 டெங்கு வலயம்

இதனிடையே, கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடித்துவக்கு குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லை, கொத்தட்டுவை, மஹரகம ஆகிய டெங்கு அபாயம் அதிகம் காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளில் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் போது 7000 இற்கும் அதிகமான வீடுகளின் சுற்றுச்சூழலை பரிசோதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2 வார காலத்திற்கு இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 46,473 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## பதில் கிடைக்காவிடின்...

அதற்கிடையில் சில குழுவினர் இவ்வாறு மருந்து பொருட்கள் கொண்டுவருவதை நிறுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். அதனால் எமக்கு பாதிப்பு ஏற்பட்டது. சுகாதாரத்துறை தொடர்பாக நீதிமன்றத்தின் சில தீர்ப்பு எமக்கு பாதகமாக அமைந்திருக்கிறது. இது தொடர்பாக நீதி அமைச்சருக்கும் எமது கவலையை தெரிவித்திருக்கிறோம். மருந்து தட்டுப்பாட்டுக்கு இதுவும் ஒரு காரணம்.

அடுத்ததாக நிதி தொடர்பாகவும் எமக்கு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. சுகாதார துறைக்கு போதுமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே நாங்கள் கேட்கிறோம். அதனால் இதுதொடர்பாக இன்று (நேற்று) பதில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடல் ஒன்று இருக்கிறது. கலந்துரையாடலில் எமக்கு சரியான முடிவு கிடைக்காவிட்டால் அது தொடர்பாக இந்த சபைக்கு அறிவிப்பேன்.

அதுமட்டுமன்றி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில், நாட்டில் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது அதற்கு பதில் சொல்லவேண்டும்" என்றார்.

## அரசாங்கத்தில் உள்ளாடைகளை...

"முறையாக கணக்கெடுப்புகள் நடத்தாது எப்படி அஸ்வெசும வேலைத்திட்டத்தை செயற்படுத்த முடியும். நாட்டில் 70 சதவீதமான மக்கள் வறுமையில் இருப்பதாக லேன்ட் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதனால் முதலில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். 14 வீதமான இருந்த வறுமை நிலைமை 31 வீதம் வரையில் அதிகரிகத்துள்ளது.

தோட்டப்புறங்களிலேயே அதிகளவில் வறுமை காணப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போது அஸ்வெசும என்று கண்கட்டு வித்தையொன்றை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இதனால் இப்போதாவது கணக்கெடுப்பை முன்னெடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம். வீடுகளில் 32 வீதமான சொத்துக்களை விற்றுள்ளனர்.

2 இலட்சம் வரையிலான பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாது இருக்கின்றனர்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையில் உள்ளவர்கள் வீழ்ந்துள்ளனர். அவர்கள் கடும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். பெரிய நிறுவனங்களும் அவ்வாறான நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன.

பிரேமதாச காலத்தில் நாட்டுக்கு டொலர்களை கொண்டுவருவதற்காக அமைக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலைகள் பல மூடப்படுகின்றன. அன்று திறக்கும் போது உள்ளாடை தொழிற்சாலைகள் திறக்கப்படுவதாக கூறினர். இப்போது மூடப்படும் போது அரசாங்கம் என்ன கூறப்போகிறது. உள்ளாடைகளை அரசாங்கத்தில் அனைவரும் தலையாலேயே போட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை விவசாயிகள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். 100 ரூபாவுக்கு நெல்லை கொள்வனவு செய்வதாக அரசாங்கம் கூறிய போதும், 80 ரூபாவுக்கும் வழங்கப்படுவதில்லை. உரம் தொடர்பிலும் பிரச்சினைகள் உள்ளன. இவை தொடர்பில் கேட்கும் போது அமைச்சர்கள் பதிலளிக்காது ஒளிந்துகொள்கின்றனர். தரமற்ற உரம் தொடர்பில் அமைச்சர்களுக்கு பொறுப்புகள் உள்ளன. அவர்கள் அதற்கு பதிலளிக்க வேண்டும்.

அத்துடன் தற்போது சிறுவர் மற்றும் தாய் போசனை குறைபாடுகள் அதிகரித்துள்ளன. அது தொடர்பாக ஏதாவது சுகாதார ஆய்வு நடத்தப்படவில்லை. தற்போது வைத்தியாலைகள் மூடப்படுகின்றன. வைத்தியசாலைகளில் உபகரணங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை"என்றார்.

## அனைத்து மதங்களையும்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) நடைபெற்ற, அண்மையில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் அனைவரும் அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும். எந்தவொரு மதத்தையும் தூண்டிவிடும் வகையில் செயற்படுவதற்கு எவருக்கும் முடியாது. அவ்வாறான கலாச்சாரத்தை இந்த நாட்டுக்கு கொண்டுவந்தவர்கள் யார் என்பதனை நாம் அறிவோம். கருத்தடை கொத்து, கருத்தடை சிகிச்சை, மருத்துவர் சாபி போன்றெல்லாம் கூறினர்.

இந்நிலையில் எந்தவொரு மதத்தை அடிப்படையாகக் கொண்டும் நக்கல் நையாண்டிகளை செய்து ஜோக்கர்களாக முடியாது. அதேபோன்று மதத் தலைவர்களும் நல்ல வசனங்களை பேசி, நல்லிணக்கம், ஒழுக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றேன்" என்றார்.

## ஜனாதிபதியுடன் பேசி...

இப்பிரச்சினைக்கு தீர்வு காண கல்வி அமைச்சு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) விசேட கூற்றை முன்வைத்தபோது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பேராதனை பல்கலைக்கழகத்தில் தற்கொலைக்கு முயற்சித்த இரண்டு மாணவர்களுக்கு பல்கலைகழக உளவியல் பிரிவு ஊடாக உளவியல் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் ஒருவேளை தான் உணவு உண்கின்றார்கள். மாணவர்களின் செலவுகளுக்கு பணம் அனுப்ப முடியாத நிலையில் பெற்றோர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாணவர்கள் உடல் நல ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள், உடல் மெலிந்துள்ளார்கள், விரிவுரைகளின் போது மாணவர்கள் மயங்கி விழுகிறார்கள் என பல்கலைக்கழக பேராசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மாணவர்கள் நாட்டில் எதிர்காலம் ஆகிய இந்த பிரச்சினையின் பாரதூரத்தன்மையை விளங்கி துரிதகரமாக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.கல்வி அமைச்சு தலையிட வேண்டும்

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடலில் ஈடுபட்டேன். பல்கலைக்கழக மாணவர்கள்,சமூகத்தினர் நடைமுறையில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட கவனம் செலுத்துமாறு அவர்கள் வலியுறுத்தினார்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, "நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் 1 இலட்சத்து 45 ஆயிரம் மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் திட்டம் ஊடாக மாதக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. பல்வேறு காரணிகளினால் 11 ஆயிரம் மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கப்படுவதில்லை. ஆகவே இந்த மாணவர்களுக்கும் புலமை பரிசில் வழங்க உரிய நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## மறுசீரமைப்பை தவிர...

வெகுவிரைவில் மறுசீரமைப்புக்கான பணிகள் முன்னெடுக்கப்படும். மின்சார சபையின் கட்டமைப்புக்களை வேறுப்படுத்தவும் சேவையாளர்களை புதிய நிறுவன கட்டமைப்புக்குள் உள்வாங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்னுற்பத்திக்கான செலவை முகாமைத்துவம் செய்யும் வகையில் மின்கட்டணத்தை காலத்துக்கு காலம் மறுசீரமைக்காத காரணத்தால் மின்சார சபை நிதியியல் ரீதியில் பாரிய நெருக்கடிகளை இதுவரை காலமும் எதிர்கொண்டது. தற்போது அமுலில் உள்ள புதிய மின்கட்டண திருத்தத்தால் தற்போது மின்னுற்பத்திக்கான செலவுகளை முகாமைத்துவம் செய்யக் கூடியதாகவுள்ளது.

மின்சார சபையை மறுசீரமைக்கும் யோசனைக்கு ஒட்டுமொத்த தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அரசியல் நோக்கத்துடன் செயற்படும் ஒருசில தொழிற்சங்கத்தினர் மாத்திரமே எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

மக்கள் விடுதலை முன்னணிக்கு சார்பாக செயற்படும் தொழிற்சங்க தலைவர் ரஞ்சன் ஜயலால் மின்சார சபை சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். இவர் தனது அரசியல் கட்சியின் தேவைக்காக மின்சார சபையின் சகல சேவையாளர்களையும் தவறான வழிநடத்துகிறார்.

## அரசாங்கம் கங்கணம்...

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், "இலங்கைத்தீவில் ஆரம்பத்தில் அனுராதபுரத்தை ஆண்ட முத்துசிவன் மன்னனின் மகன் தீசன்(தேவநம்பியதீசன்) என்கிற தமிழ் மன்னன் காலத்தில் தான் பௌத்தம் கொண்டுவரப்பட்டது என்ற உண்மையை மகாவம்சத்தின் பாளி மொழியிலான மூலப் பிரதி கூறியுள்ளதை மறைத்து உண்மையான தமிழ்ப் பௌத்த தொல்லியல் அடையாளங்களை சிங்கள பௌத்தமாக மாற்றும் எதேச்சதிகார நடவடிக்கைகளையே பேரினவாத ஆட்சியாளர்களும் தொடரந்து மேற் கொள்கின்றனர்.

தீசன் என்ற பெயரை திஸ்ஸ என சிங்களத்தில் பிற்காலத்தில் மாற்றியது போலவே அனுராதபுரத்தில் இருந்து வடகிழக்கு மாகாணங்கள் முழுவதும் தமிழ் மன்னர்கள் ஆண்ட போது சைவ ஆலயங்களுடன் தமிழ் பௌத்தமும் பரவி இருந்தது அவ்வாறான தொன்மைகளை தற்போது சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்தமாக மாற்றியமைக்கும் செயற்பாடு தமிழின அழிப்புக்கு வலுச் சேர்க்கும் பாரிய ஆபத்தாக தமிழர் தாயகத்தில் மாறியுள்ளது.

குருந்தூர் மலையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட செயற்பாடு சட்டத்திற்கு முரணானது என்பதை நீதிமன்ற தடையே மிகப் பெரும் ஆதாரம் அதனை மீறி இராணுவத்தை முழுமையாக பயன்படுத்தி நீதிமன்றத்தை அவமதித்து விகாரையை கட்டி முடித்து இராணுவம் அமைத்ததாக பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது என்றால் தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு நடைபெறும் அடக்கு முறைகளுக்கு மிகப் பெரும் ஆதாரம் ஜனநாயகம் என்ற பெயரில் நடைபெறும் அரச சர்வாதிகாரம்" என்று குறிப்பிட்டார்.

## ஜனாதிபதியுடன் பேசி...

அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் தனியாருக்கு வழங்கப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்கள் தேயிலைஉற்பத்தியைவிட வேறு தொழில்களில் நாட்டம் காண்பிப்பதாகவும், தோட்டங்களை சரியான முறையில் பராமரிக்காமல் இருப்பதாகவும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

பணியாளர்களுக்கு நலன்புரி சேவைகளை வழங்குவதில்லை என்றும், இவ்வாறான பெருந்தோட்ட நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கு உரிய பொறிமுறையொன்று இல்லையென்றும் இங்கு கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தப் பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்த தொகையைச் செலுத்துவதுடன், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கூட செய்துகொடுப்பதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மிகவும் மோசமான குத்தகை ஒப்பந்தத்துக்கு அமையவே இந்தப்பெருந்தோட்டங்கள் தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனால் அரசாங்கத்துக்கு இந்தப் பெருந்தோட்ட நிறுவனங்கள் குறித்த கட்டுப்பாடும் மோசமான நிலையிலேயே இருப்பதாக அமைச்சர்தெரிவித்தார்.

இந்த நிறுவனங்கள் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில்லை, விசேடமாக சிலநிறுவனங்கள் தேயிலை பயிர்ச்செய்கையிலிருந்து விடுபட்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும் அவர்சுட்டிக்காட்டினார். இவ்வாறான நிறுவனங்களின் கீழ் பல ஹெக்டயர் காணிகள் பயிர்ச்செய்கை

எதுவும் இன்றி பயன்படுத்தப்படாமல் இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது" என்றார்.

## ரூ.64 கோடி பெறுமதியான...

அதற்கமைய கப்பலை சோதனை செய்த சுங்க அதிகாரிகள், கப்பலில் இருந்த குளிரூட்டப்பட்ட கொள்கலனை சோதனை செய்து, இந்த போதைப்பொருளை கண்டுபிடித்தனர்.

பாகிஸ்தானின் கராச்சி நகரிலிருந்து வருகைதந்த கப்பலில் இருந்தே குறித்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களையும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரணிலின் தலைமையின்...

கடன் மறுசீரமைப்புத் திட்டங்களின் போதும் இலங்கை ஜனாதிபதியின் வழிகாட்டலின் பேரில் அர்ப்பணிப்புடன் இலங்கை நாட்டின் அதிகாரிகள் பணியாற்றியதாகவும் ஜப்பானின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தார்.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கியை வெளியுறவு அமைச்சில் வியாழக்கிழமை (22) சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்த கலந்துரையாடலில் போது, இலங்கை  ஜப்பான் இடையே நிலவும் நீண்டகால நட்புறவை இருவரும் நினைவூட்டியதுடன் எதிர்காலத்தில் நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மாகாண ஆளுநர் என்ற வகையில் மாகாணத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு ஜப்பான் அரசு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், தங்களுடைய முயற்சியை ஜப்பான் அரசு பாராட்டுவதாகவும் ஷுன்சுகே டேக்கி செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த பெப்ரவரி மாதம் சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ள இலங்கை வந்த வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கிக்கு சிறந்த வரவேற்பை இலங்கை அளித்திருந்தமைக்காக அவர் பாராட்டையும் நன்றியினையும் ஆளுநரிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் இரு நாடும் இணைந்து மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய துறைசார் தொழிலை மேம்படுத்துவது குறித்தும், கனிம வளங்கள் குறித்து ஆராய்ந்து அதனை செயற்படுத்த ஜப்பான் அரசு பங்களிப்பு அளிக்க வேண்டும் என செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

## மேற்கிலும் தெற்கிலும்...

இரு மாகாணங்களில் இருந்தும் துப்பாக்கிச் சூடு மற்றும் பிற குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளதை அடுத்து, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த விசேட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான சம்பவங்கள் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்புடையவை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அனுமதிப்பத்திரம் காலாவதியான பதிவு செய்யப்படாத துப்பாக்கிகள் அல்லது ஆயுதங்களை கையளிப்பதற்கு ஜூலை 31ஆம் திகதிவரை விசேட பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமன்னிப்பு காலம் முடிவடைந்த பின்னர் சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்றுவதற்காக பொலிஸார் விரிவான சோதனைகளை முன்னெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Buddhi Batiks

# புத்தி பெட்டிக்ஸின் 52 வருட பூர்த்தி

இலங்கையின் பிரத்தியேகமான வர்த்தக நாமமான புத்தி பெட்டிக்ஸ் தனது 52 வருட பூர்த்தியைக் கொண்டாடுவதுடன், வருட இறுதியில் நடைபெறவுள்ள கண்காட்சி நிகழ்வுக்கும் தன்னை தயார்ப்படுத்துகின்றது

புத்தி பெட்டிக்ஸ் (Buddhi Batiks) தனது 52 ஆவது வருட பூர்த்தியை ஜூன் 23ஆம் திகதி கொண்டாடியது. அது தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் முற்காட்சி நிகழ்வையும் கொழும்பு 7 இலுள்ள லயனல் வென்ட் கலை அரங்கில் ஏற்பாடு செய்திருந்தது.

வர்ணமயமான வெக்ஸ் மற்றும் நிறச்சாயம் ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்துள்ள புத்தி பெட்டிக்ஸ் ஸ்தாபகர்களின் கொண்டாட்ட நிகழ்வில் பெருமளவு விருந்தினர்கள் பங்கேற்றிருந்தனர். இந்த பிரத்தியேக முற்காட்சி நிகழ்வைத் தொடர்ந்து, பொது மக்கள் பார்வையிடுவதற்காக ஜூன் 26ஆம் திகதி வரை முற்காட்சி நிகழ்வு தொடர்ந்து முன்னெடுக்க ஏற்பாடாகியிருந்தது.

புத்தி மற்றும் ரத்னசிறி கீர்த்திசேன ஆகியோர் புத்தி பெட்டிக்ஸை 1971 ஆம் ஆண்டில் நிறுவியிருந்தனர். அக்கால கட்டத்தில், புத்தி கீர்த்தி ஊடகவியலாளராக திகழ்ந்தார். அவரது பிறந்த நாளுக்காக அவரின் மனைவியால், பத்திக் சட்டை ஒன்றை பரிசாக வழங்க எண்ணினார். அதற்காக கிராமத்தைச் சேர்ந்த பத்திக் கலைஞரை அவர் தொடர்பு கொண்ட போதிலும், உரிய நேரத்தில் சட்டை தயாராகியிருக்கவில்லை. அவர் அதிருப்தியடைந்த போதிலும், புத்தி தாம் ஒரு கலைஞர் என்பதால், நாம் இணைந்து சட்டையை தயாரிப்போம் என்றார். அவர்கள் தயாரித்த முதலாவது பத்திக் உற்பத்தியாக அது அமைந்திருந்தது. முயற்சி சிறப்பாக கைகூடவே, அதனை ஒரு வியாபாரமாக முன்னெடுப்பதற்கு அவர்கள் தீர்மானித்தனர்.

தமது இல்லத்துக்கு பின்பகுதியில் தொழிற்சாலை ஒன்றை நிறுவினர். அத்துடன், முன்பகுதியில் விற்பனை நிலையமொன்றையும் நிறுவினர். இந்த விற்பனையகத்துக்கு பல சுற்றுலாப் பயணிகள் விஜயம் செய்வதுடன், அவர்களை ஐரோப்பாவில், குறிப்பாக ஸ்கன்டினேவியா மற்றும் ஜேர்மனியில் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்துமாறும், விற்பனை செய்யுமாறும் அழைத்திருந்தனர். இந்தப் பயணங்களினூடாக திரட்டிய நிதியைக் கொண்டு தமது வியாபாரத்தை விரிவாக்கம் செய்தனர்.

புத்தி பெட்டிக்ஸ் ஸ்தாபகர் புத்தி கீர்த்திசேன கருத்துத் தெரிவிக்கையில், “பேரவாவாக ஆரம்பித்த இந்தப் பயணம் தற்போது ஓர் அடையாளப் பெயராக மாற்றம் பெற்றுள்ளது. எனது மகள் தர்ஷி மற்றும் அடுத்த தலைமுறை கலைஞர்கள் எமது நாமத்தை தொடர்ந்து முன்கொண்டு செல்வார்கள் என்பதில் நான் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளேன்.” என்றார்.

புத்தி பெட்டிக்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியும் புத்தாக்க பணிப்பாளருமான தர்ஷி கீர்த்திசேன கருத்துத் தெரிவிக்கையில், “புத்தி பெட்டிக்ஸை, நவீன இலங்கை வர்த்தக நாமமாக முன்நோக்கி கொண்டு செல்ல என்னை அர்ப்பணித்துள்ளேன். இதனூடாக கலைஞர்களுக்கு வலுச்சேர்க்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், சர்வதேச தேசப்படத்தில் பத்திக் உற்பத்திகளுக்கு முக்கிய இடத்தை வழங்கும். இந்த ஆண்டின் பிற்பகுதியில் நாம் முன்னெடுக்க திட்டமிட்டுள்ள கண்காட்சியினூடாக, கடந்த 52 வருட காலமாக எமது தொடர்ச்சியான பணிகளின் பயனை மக்களுக்கு நேரடியாக கண்டு அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்” என்றார்.



கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்ட தீர்மானங்கள் அர்த்தமற்றவை

# 260 கியூப் மணல் தினசரி அகழ்ந்தெடுக்கப்படுகிறது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில், மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நீண்ட நேரம் பேசப்பட்டாலும், தொடர்ந்தும் சட்டவிரோதமான முறையில் நாளாந்தம் 210 முதல் 260 கியூப் மணல் அகழ்ந்தெடுத்து, வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டை அண்மித்த பகுதிகள், ஆற்றுப்படுக்கைகள் என்பவற்றில் தொடர்ந்தும் சட்டவிரோதமான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் எதிர்காலத்தில் குளம் பாரிய ஆபத்தை எதிர்நோக்கும் எனவும் இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த மே மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இரண்டாவது மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் ஜூன் 13ஆம் திகதி நடைபெற்ற மூன்றாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருந்த போதும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அக்கரைப்பற்றில்

## மாணவர்களுக்கு சமுர்த்தி புலமைப்பரிசில்

■ எம்.எல்.எஸ் டீன்

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 102 மாணவ, மாணவியருக்கு சமுர்த்தி ‘சிப்தொர’ புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்சார் தலைமையில் பிரதேச செயலகத்தில் புதன்கிழமை (21) நடைபெற்றது.

இதன் போது, உதவி பிரதேச செயலாளர் எகியா றாசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம் தமீம், கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்சா, சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரி மசூர், சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான யூ.கே.எம் நளீம், கே. சத்தியபிரியன், சமுர்த்தி சமுகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ்.எம்.ஏ அமீன் ஆகியோருடன் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

அக்கரைப்பற்று சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம் நிஹ்மத்துல்லாவின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள 28 கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி நலன் உதவி பெறும் குடும்பங்களில் 2022/2024ஆம் கல்வியாண்டில் உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும்மாணவர்களில் ஒரு மாணவனுக்கு மாதாந்தம் 1,500ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு 36,000ரூபாய் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில்

## தமிழ் மாமன்றத்தின் புத்தகத் திருவிழா

■ க. அகரன்

தமிழ் மாமன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி, பல்வேறு நிகழ்வுகள் உள்ளடங்கிய ‘வன்னியின் புத்தகப் பண்பாட்டுத் திருவிழா’வை சனிக்கிழமையும் (24) ஞாயிற்றுக்கிழமையும் (25) சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்தவுள்ளது.

பல்வேறு புத்தக நிலையங்களின் ஒன்றிணைவில், மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற உள்ளதுடன், தமிழ் இளைஞர்களின் ஒன்றிணைவில் பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும்நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான கதை சொல்லல் நிகழ்வுகள், புத்தக அறிமுக நிகழ்வுகள், எழுத்தாளர்களுடனான கலந்துரையாடல்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மருதங்கேணி விவகாரம் தொடர்பில்

## இரண்டு ஊடகவியலாளர்களிடம் வாக்குமூலம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்




மருதங்கேணி விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சியை சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் இரணைமடுவில் உள்ள பிராந்திய குற்ற விசாரணை பிரிவினரால் நேற்று முன்தினம் (21) இரண்டு மணி நேரமாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த. பிரதீபன் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் த. பரமசிவன் (சிவா) ஆகியோரே குறித்த வாக்குமூலத்தை வழங்கினர்.

மருதங்கேணியில் ஜூன் இரண்டாம் திகதி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்ட கூட்டத்தில், புலனாய்வாளர் சென்றிருந்த நிலையில், குழப்பம் ஏற்பட்டதுடன், சமூக வலைத்தளங்களில் வீடியோக்கள் வெளியாகி பரப்பை ஏற்படுத்தின. குறித்த காணொளிகள், செய்திகள் தொடர்பாகவே, ஊடகவியலாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாக தெரியவருகிறது.

குருந்தூர் மலையில்

## நீதிமன்ற கட்டளையை மீறியமையை உறுதிப்படுத்திய ஆவணம்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில், தொடர்ந்தும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இதேவேளை, இராணுவத்தினரின் பங்களிப்புடனேயே குறித்த விகாரை பணி இடம்பெற்றது என்பதை அங்கு புதிதாக அமைக்கப்பட்ட கல்வெட்டு மூலம் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த ப்பட்டுள்ளது.

இதன்மூலம், குருந்தூர் மலையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பௌத்தமயமாக்கல் முயற்சி அம்பலமாகியுள்ளது. குறிப்பாக, 79 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களம் எடுத்து, அங்கு நீதிமன்ற கட்டளைகளை மீறி, இராணுவத்தை கொண்டு விகாரை அமைத்துள்ளதோடு, மேலும் மக்களின் 279 ஏக்கர் காணியை சுவீகரிக்க, தொல்பொருள் திணைக்களம் முயன்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில்

## மூன்று நாள் கடவுச்சீட்டு சேவை ஆரம்பம்

■ ரீ.எல் ஜவ்பர்கான்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவில் உருவான ஒன்லைன் மூலம் மூன்று நாள்களில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் நேற்று (22) காத்தான்குடி பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டைப் பெறும் நிலையங்களாக காத்தான்குடி மற்றும் வாழைச்சேனை பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்மாந்துறை கோரக்கோவில்

## இன்று திருக்கதவு திறத்தல்

■ வி.ரி சகாதேவராஜா



சம்மாந்துறை தமிழ்ப் பிரிவு கோரக்கோவில் ஸ்ரீ அகோர மாரியம்மன் கோவில் வருடாந்த தீமிதிப்பு சடங்கு இன்று (23) கடல் நீர் எடுத்து வந்து திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று, பத்தாம் நாள் ஜூலை மாதம் மூன்றாம் திகதி, தீ மிதிப்பு சடங்கு நடைபெற இருக்கிறது. கோவில் பிரதம பூசகர் முருகேசு ஜெகநாதன் தலைமையில் சடங்குகள் இடம்பெறும்.

நாளை (24) பாற்குடபவனி, காலை ஏழு மணியளவில் சம்மாந்துறை பத்ரகாளியம்மாள் கோவிலில் இருந்து ஆரம்பித்து அகோர மாரியம்மன் கோவிலை வந்தடையும்.


### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எஸ்.எம். சேனாநாயக்க என்ஜினியரிங் (பீவீடீ) எல்டீடி
பீ - வி 00276389
இல. 331/B4, வில்லியம் ஜயசூரிய மாவத்தை, பண்டாரகம வீதி, கெஸ்பேவ.

சோஃப்ட் வோக் ஷூஸ் (பீவீடீ) எல்டீடி
பீ - வி 00276351
இல. 20/11/B1, வடகெய்யவல வீதி, உடாமுல்ல, நுகேகொடை.

அரிம்பு பிளான்டேஷன் (பீவீடீ) எல்டீடி
பீ - வி 00278363
இல. பால்கன் தேயிலை தொழிற்சாலை, எலபாத, இரத்தினபுரி.

அக்ரி ஸ்டார் ஃபிஷ் மீல் (பிரைவட்) லிமிட்டட்
பீ - வி 00244204
இல. ஆர் எம் யு 17 மேல் தளம், மத்திய மீன் சந்தை வளாகம், பேலியகொட.

**கம்பனியின் புதிய பெயர்**
**அக்ரி ஸ்டார் பிஷ் மீல் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**பணிப்பாளர்கள்**

# வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு அதிரடி நடவடிக்கைகள் அவசியம்

தொற்றுநோய்களாலும் தொற்றா நோய்களாலும் மரணிப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் நமது நாட்டில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதற்கிடையே புதுப்புது தொற்று நோய்கள் தொடர்பிலும் சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துக் கொண்டே இருக்கின்றனர்.

பிறப்பிருக்குமானால் இறப்பிருக்கும் என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை. எனினும், இவ்வாறான நோய்கள், திடீர் விபத்துகள், கவனயீனமாக செயற்பட்டதால் ஏற்படும் உயிரிழப்புகள், எச்சரிக்கையை கவனத்தில் எடுக்காது செயற்படும் போது, வேடிக்கை பார்க்கச் செல்லுகையில், தவறான மருந்துகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் குறையவில்லை.

இதற்கிடையே, ஒவ்வொரு மூன்று மணி நேரத்துக்கும் 32-35 இலங்கையர்கள் விபத்தால் மரணமடைகின்றனர் என்றும் வருடாந்தம் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்துகளால் மரணங்கள் மட்டுமன்றி அங்கவீனமடைவோரின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. இது வாழ்நாள் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்றது. அங்கவீனமடைபவர் மட்டுமன்றி, அவரை சார்ந்திருப்போருக்கும் பெரும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தி விடுகின்றது. ஆகையால், விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதிகவேகம், போதையில் வாகனங்களைச் செலுத்துதல், நித்திரை கலக்கம், போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு தகுதியற்ற வாகனங்களைச் செலுத்தல் போன்றவை பிரதான காரணங்களில் சிலவாக அமைந்துள்ளன. ஆகையால், போக்குவரத்து சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல், இருக்கும் சட்டங்களை கடுமையாக அமல்படுத்தல் என்பன முக்கியமாகும். இல்லையேல், விபத்துகளையும் உயிரிழப்புகளையும் தடுக்கமுடியாது.

விபத்துகள் இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கிலும் முக்கிய பிரச்சினையாகவே இருக்கின்றன. இலங்கையில் வருடாந்தம் சுமார் ஒரு மில்லியன் உள்நோயாளிகள் பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

வருடாந்தம் சுமார் 3 அல்லது 4 மில்லியன் பேர் விபத்துகளில் காயமடைவதால் மருந்துகளை உட்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் டொக்டர் சமிந்த சிறிதுங்க தெரிவித்துள்ளது. இது, மருத்துவத்துறைக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் இக்காலப்பகுதியில் வைத்தியசாலைகளிலும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

பாரிய விபத்தொன்று ஏற்பட்டதன் பின்னர், ஒருசில நாள்களுக்கு விழிப்புடன் செயற்படும் போக்குவரத்துப் பொலிஸாரும் ஏனைய தரப்பினரும், பின்னர் அதைக் கைவிட்டுவிடுவர். வாகனங்களை இரவில் செலுத்துவோருக்கு நித்திரைக் கலக்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஒருசில வீதிகளில் கடமையில் இருக்கும் பொலிஸார், தேநீர் வழங்கியமையை கடந்த காலங்களில் அவதானிக்க முடிந்தது.

போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் திடீர், திடீரென பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, போக்குவரத்துக்கு தகுதியற்ற வாகனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவையெல்லாம் சில நாள்களுக்கு மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு போதியவாறான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை பல மட்டங்களிலும் முன்னெடுக்க வேண்டும். அத்துடன் சட்டமும் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் விபத்துகளால் ஏற்படும் மரணங்களை தவிர்க்கவே முடியாது என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நிரந்தரத்தை நாடி வாழ முடியாது. நித்திய வாழ்வு எனப் பலர் கற்பனை செய்கின்றனர். இடையில் நிறுத்தப்படும் வாழ்வில், கடவுளைப் பற்றி அநேகர் கண்டு கொள்வதில்லை.

வணங்குபவர்களும் எவ்வளவு காலமும் வாழமுடியாது. இயற்கையின் சுழற்சியில் உலகம் சிக்கியுள்ளது. எவரது வாழ்க்கையிலும் வாழும் காலத்தை அறுதியாகச் சொல்ல முடியாது.

அநியாயத்தை நித்தியம் என எண்ணுகின்றனர். வாழும் காலத்தை மகிழ்ச்சியுடன் களிப்பதே சிறப்பானது. வாழ்க்கையைப் போர் என எண்ணினால், போர்தான். அது பற்றிக் கலங்காமல் வாழ்ந்தால், அதுவே சொர்க்கம்.

வருமானத்தில் குறைந்தவன், சிக்கனமாகச் சீவிக்கின்றான். கோடீஸ்வரன் வாழ்க்கை என்றும் போராட்டம்தான். வாழும் காலம் எமக்கானது. யாவருக்கும் களிப்புடன் வாழ உரிமையுண்டு.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின்னர் 06:

# ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் [1883-1983]



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கறுப்பு ஜூலை இடம்பெறுவதற்கு சரியாக, ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கைத் தீவில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தே, இந்தக் கட்டுரை நோக்குகிறது. 1883ஆம் ஆண்டு, இலங்கையில் இரண்டு முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்தன.

ஒன்று, கிழக்குக் கடற்கரையோரமும் இன்னொன்று மேற்குக் கடற்கரையை அண்டியும் அரங்கேறின. இவ்விரு நிகழ்வுகளும் 19ஆம் நூற்றாண்டின் இறுதி இரண்டு தசாப்தங்களில், இலங்கையின் முக்கியமான சமூக நெருக்கடிகள் குறித்த ஒரு சித்திரத்தைத் தருகின்றன.

1883ஆம் ஆண்டு மட்டக்களப்பில், மீனவச் சமூகத்துக்கும் கள்ளிறக்கும் சமூகத்துக்கும் இடையிலான முரண்பாடு, சாதிச் சண்டையாக முற்றி, கலவரமாக உருவெடுத்தது. இது குறித்த விரிவான குறிப்புகளை ஏ.சி டெப் எழுதிய ‘சிலோன் பொலிஸின் வரலாறு’ என்ற நூல் தருகிறது.

அக்குறிப்புகளின்படி, மட்டக்களப்பிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில், மீனவ சாதியினருக்கும் கள் இறக்குபவர்களுக்கும் இடையில், சாதிப் பிரச்சினை கலவரமானது. தங்களது உயர்சாதிக்கு ஒப்பாக, சாதி ரீதியில் குறைந்தவராகக் கருதப்பட்ட கள்ளிறக்கும் சாதியினர் உடைகளை அணியத் தொடங்கியதை, மீனவ சாதியினரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இதனால் இரு தரப்புக்கும் இடையில் கைகலப்பாகத் தொடங்கி மோதல், கத்திச் சண்டையாகியது.

இத்தகவலை அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து, பலரைக் கைது செய்தனர். இருந்தபோதும் மீனவ சமூகத்தினர் ஒன்று திரண்டு, கள்ளிறக்கும் சமூகத்தினரின் வீடுகளைத் தாக்கினர். வீடுகள் சூறையாடப்பட்டன; பல வீடுகள் எரிக்கப்பட்டன.

தங்களுடைய தகுதிக்கு ஒத்துப்போகவில்லை என்று உயர்சாதி அண்டை வீட்டுக்காரர்கள் கருதும் பாணியில், கள் இறக்குபவர்கள் உடை அணியத் தொடங்கியதை அடுத்து, கத்திகளுடன் கூடிய சண்டையாக தொடங்கியது. இதைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், பலரை கைது செய்தனர்.

பின்னர், மீனவர்கள் மீண்டும் திரண்டு வந்து, காவலில் இருந்த அவர்களைத் தாக்கியவர்களின் வீடுகளை தாக்கினர். அடுத்த நாளும், அவர்கள் ஒன்றுகூடி வீதிகளில் ஊர்வலம் நடத்தினர். ஆனால், எந்த அசம்பாவிதமும் நிகழவில்லை. இருப்பினும் துர்நடத்தை கொண்டவர்கள், வீடுகளை சூறையாடுவதற்கும் எரிப்பதற்கும் வாய்ப்பைப் பயன்படுத்தினர்.

கொலனியாதிக்க காலத்திலும் சாதிய ஆதிக்கம் மேலோங்கிய சமூகமாகவே இலங்கையும் குறிப்பாகத் தமிழ்ச் சமூகமும் இருந்தது என்பதை, இந்நிகழ்வு தெளிவாகக் காட்டுகின்றது. இனமுரண்பாடுகள் கூர்மையடைவதற்கு வெகுகாலத்துக்கு முன்பே, அகமுரண்பாடுகள் தீவிரமானதாகவே இலங்கையின் இனத்துவக் குழுக்கள் இருந்தன என்பதற்கான பல சான்றுகளில், மட்டக்களப்புக் கலவரம் ஓர் உதாரணம் மட்டுமே!

1870களின் இறுதிப் பகுதிகளில், பௌத்த மறுமலர்ச்சி என்பது கிறிஸ்தவத்தை எதிர்ப்பதை நோக்காகக் கொண்டும் ‘சுதேசி’கள் என்ற கருத்தாக்கத்தோடும் விருத்தி பெற்றது. கிறிஸ்தவ வீடுகளுக்கு பக்கத்தில் ‘பிரித்’ ஓதும் நிகழ்வுகளை, புத்தபிக்குகள் தொடர்ச்சியாகச் செய்து வந்தனர். இதற்கெதிராக, நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்ட போதும், அதை மதியாது ‘பிரித்’ ஓதும் நிகழ்வுகள் நடந்தன. இதன் மூலம், ‘பௌத்தர்களே தேசப்பற்றாளர்கள்’ என்ற ஓர் எண்ணக்கரு பரவலாக்கப்பட்டது.

1881ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களை எரிச்சலூட்டும் நடவடிக்கையாக, பௌத்த ஊர்வலங்கள் தொடர்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்டன. இது குறித்துப் புகார்கள் அளிக்கப்பட்ட போதும், கொலனி நிர்வாகம் பௌத்தர்களைப் பகைத்துக் கொள்ள விரும்பாமையால், நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

இது ஒருபுறம், பௌத்தர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. மறுபுறம், நிர்வாகத்தின் பாராமுகம் காரணமாக எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்ற முடிவை கிறிஸ்தவர்கள் எடுத்தார்கள்.

கொச்சிக்கடையில் (கொட்டாஞ்சேனை) புனித லூசியா தேவாலயம் 1779இல் கட்டப்பட்டது. இதற்கு மிக அண்மையிலேயே, பௌத்த விகாரை 1832இல் உருவாக்கப்பட்டது. இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டியாகச் செயற்பட ஆரம்பித்தன.

1843இல் ‘மிகெட்டுவத்த உன்னான்சே’ என்று அழைக்கப்பட்ட மொஹொட்டிவத்தே குணானந்தா தேரர் இதன் விகாராதிபதியானார். இவர், மக்களைக் கவரும் பேச்சாளராகவும் மதக்குரோதத்தை கக்குவதன் மூலம் வெறுப்புணர்வைத் தூண்டுபவராகவும் இருந்தார். இதனால் ‘பௌத்த மதத்தின் காவலன்’ போல தன்னைக் காட்டிக்கொண்டார்.

கொச்சிக்கடைக் கலவரத்தை அடுத்து, இது குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழு சமர்பித்த அறிக்கையில், இவர் குறித்த ஒரு தகவல் முக்கியமானது.

இவர், அமரபுர நிக்காயாவைச் சேர்ந்தவர். அமரபுர நிக்காய 1803ஆம் ஆண்டே உருவாக்கப்பட்டது. இதன் உருவாக்கத்துக்கும் சிங்கள சாதியமைப்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இது குறித்து இன்னொரு சந்தர்ப்பத்தில் நோக்கலாம்.

குணானந்தா தேரர், பௌத்த துறவியாகி பின்னர் காவியுடையைக் களைந்தவர். சாதாரண மனிதனாக வாழ்ந்துவிட்டு, பின்னர் மீண்டும் துறவறம் பூண்டவர். இதனால், இவர் தனக்கான அங்கிகாரத்துக்காக அதிதீவிர நிலைப்பாடுகளை எடுத்தார். விவாதங்களில் இவரது கீழ்த்தரமான மொழிப் பிரயோகங்களை, பிற மதத்தினர் மட்டுமன்றி இவரோடு நின்ற சகாக்களே கண்டித்துள்ளனர். ஆனால், இவருக்கு மக்களின் ஆதரவு இருந்தது.

விகாராதிபதியான உடனேயே தனது செல்வாக்கை விரிவுபடுத்த, குறித்த விகாரையைப் விரிவுபடுத்தி, புனித லூசியா தேவாலயத்தை விடப் பெரியதாகவும் பிரம்மாண்டமானதாகவும் உருவாக்க விளைந்தார். பௌத்த தத்துவங்களை விட, பெரிய விகாரைகளை அமைப்பதும் விகாரைகளுக்கான காணிகளை வாங்குவதும் என இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சி என்பது, புத்தரது போதனைகளுக்கு அன்றி, லௌகீய விடயங்களை முக்கியப்படுத்தியது. இதனாலேயே, இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியை ‘புரட்டஸ்தாந்துப் பௌத்தம்’ என்று பேராசிரியர் கணநாத் ஒபயசேகர குறிப்பிடுகிறார்.

தனது விகாரையைப் புதுப்பித்த குணானந்தா தேரர், அதை ஒரு திருவிழாவாக நடத்தத் திட்டமிட்டார். அதன்படி, ஏழு வாரங்கள் நீடிக்கும் நிகழ்வுகள் திட்டமிடப்பட்டன. ஒவ்வொரு நாளும் ‘பிரித்’ ஓதுவது, 500 பிக்குகளை ஊர்வலமாக அழைத்து வருவது எனப் பல நிகழ்வுகள் இதில் அடங்கின.

இதன் இறுதிநாளாக மார்ச் 31ஆம் திகதி மிகப்பெரிய பெரகரவுடன் நிறைவு செய்வது என்று முடிவாக, இதற்கான அனுமதியை கொலனிய நிர்வாகத்திடம் ஜனவரி மாதம் கோரப்பட்டது.

பெப்ரவரி மாதம் நகரில் சின்னம்மை வேகமாகப் பரவுவதாக பிரதம மருத்துவ அதிகாரி தெரிவித்தார். இதையடுத்து நிகழ்வுகள் எதையும் நடத்த வேண்டாம் என அரசாங்கம் விகாராதிபதியிடம் சொல்லியது. குணானந்தா தேரர், மார்ச் 31 வரை எதுவித நிகழ்வுகளையும் நடத்துவதில்லை என பிரித்தானிய நிர்வாகத்திடம் உறுதியளித்தார்.

நகரில் சின்னம்மை பரவவில்லை. இது பௌத்தத்துக்கு எதிரான கிறிஸ்தவர்களின் திட்டமிட்ட சதி என்ற கட்டுக்கதையை மக்களிடம் பரப்பினார். திருவிழாவுக்கான பணிகளைத் தொடர்ந்து செய்யுமாறு தனது ஆதரவாளர்களிடம் கேட்டுக் கொண்டார். விகாரைக்கான அன்பளிப்புகளையும் பெரகரவுக்கான பொருட்களையும் பக்தர்கள் தர வேண்டும் என்ற அவரது வேண்டுகோள் துண்டுப்பிரசுரங்கள், கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் விநியோகிக்கப்பட்டன.

ஆனால், இத்துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்கான அனுமதி பெறப்படாத நிலையிலேயே இவை நடந்தன. பெப்ரவரி மாத நடுப்பகுதி முதல், விகாரைக்குத் தினமும் பொருட்களைக் கொண்டு வரத் தொடங்கினார்கள். இந்நிகழ்வுகள், பௌத்தம் அரசுக்கும் அரசாங்கத்துக்கும் அப்பாற்பட்டதாக, உயர்வானதாக, நாட்டின் சட்டதிட்டங்களுக்கு மேலானதாக தன்னைக் கட்டமைத்துக் கொண்ட வரலாற்றின் பகுதியாக நோக்கப்பட வேண்டும்.

தினமும் தேவாலயத்தைத் தாண்டி, பெருந்தொனியில் ‘பிரித்’ ஓதியபடியும் வாத்தியங்கள் முழங்கியபடியும் ஊர்வலங்கள் சென்றன; கிறிஸ்தவர்களை எரிச்சலடைய வைத்தன. இவை தங்களது புனித பாஸ்கு காலத்திலும் நடக்குமோ என்று அவர்கள் கவலை அடைந்தனர். குணானந்தா தேரர், கிறிஸ்தவர்களின் புனித பாஸ்கு தினங்களில் மிகப்பெரிய ஊர்வலங்களைத் திட்டமிட்டார்.

மார்ச் மாதம் ஆறாம் திகதி, புனித லூசியா தேவாலயத்தின் மதகுருக்களில் ஒருவரான அருட்தந்தை மாசிலாமணி அடிகளார், பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பினார். ஆண்டுதோறும் தாங்கள் குருத்தோலை ஞாயிறு, பெரிய வெள்ளி, ஈஸ்டர் தினங்களில் ஊர்வலம் செல்வது வழக்கம். இம்முறை பௌத்தர்களும் அதே நாள்களில் ஊர்வலங்களைத் திட்டமிடுவதால், மோதல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டார்.

முதலில் அனுமதி கோருபவர்களுக்கு அனுமதியும் பாதுகாப்பும் வழங்கப்படும் என பதில் அனுப்பப்பட்டது.

மறுநாள், அருட்தந்தை மாசிலாமணி அடிகளார், ஊர்வலத்துக்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்தார். இக்காலப்பகுதியில், கொச்சிக்கடைப் பகுதியில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களாக இருந்தனர்.

கொச்சிக்கடையில் மத முரண்பாடு பிரதானமானதாக இருந்தபோதும், இதற்கு ஓர் இனத்துவ அடையாளம் பின்புலத்தில் இருந்தது. இது சிங்கள-பௌத்த எதிர் தமிழ்-கிறிஸ்தவர் என்ற பரிமாணத்தையும் கொண்டிருந்தது.

## கடிதங்கள்

### மன்னார் அல் அஸ்ஹர் ம. வித்தியாலயம்:

## இடை நிறுத்தப்பட்ட பஸ் சேவையை உடன் ஆரம்பிக்கவும்

மன்னார் அல் அஸ்ஹர் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவர்களுக்கு, இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலை ஊடாக முன்னெடுக்கப்பட்டு வந்த பஸ் சேவை, எவ்வித முன் அறிவித்தல் இன்றி, திடீர் என இடைநிறுத்தப்பட்டு உள்ளமையால், பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக, பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து, மன்னார் சாலை முகாமையாளர், வட பிராந்திய அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும், அவர்கள் நேற்று (22) வரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்காமல், அசமந்தப் போக்குடன் செயற்படுவதாக பாடசாலை சமூகத்தால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் அல் அஸ்ஹர் ம. வித்தியாலயத்துக்கு கரிசல், புதுக்குடியிருப்பு, தாராபுரம் போன்ற கிராமங்களை சேர்ந்த மாணவர்களின் நலன் கருதி குறித்த பஸ் சேவை முன்னெடுக்கப்பட்டு வந்தது. கரிசலில் இருந்து புதுக்குடியிருப்பு, தாராபுரம் ஊடாக மாணவர்களை ஏற்றி வரும் குறித்த பஸ், காலை 7.20 மணியளவில் மன்னார் பிரதேச செயலக வீதியை வந்தடையும். பின்னர், மாணவர்கள் அங்கிருந்து பாடசாலையை சென்றடைவார்கள்.

பாடசாலை முடிவடைந்த பின்னர், மதியம் 2.10 மணி அளவில், மன்னார் பிரதேச செயலக வீதியில் நிற்கும் மாணவர்களை ஏற்றிக் கொண்டு தாராபுரம், புதுக்குடியிருப்பு, கரிசல் கிராமங்களைச் சென்றடையும். எனினும் குறித்த இரண்டு சேவைகளும் இடை நிறுத்தப்பட்டு சுமார் ஒரு மாதத்தைக் கடந்துவிட்டது.

எனவே, இடை நிறுத்தப்பட்ட சேவையை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் பாடசாலை சமூகத்துக்கு இணைந்த எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தர்மசங்கட சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

# இன்றைய உலகில் ஆங்கிலக் கல்வி



**சிவகுமாரன் கதீசனா**
ஊடகக் கற்கைகள் 2ம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு தனிமனித வெற்றிக்கும் இன்றியமையாத காரணியாக கல்வி காணப்படுகிறது. கல்வியால் தன்னை உயர்த்திக் கொள்ள ஒவ்வொரு தனி மனிதனும் ஓடிக்கொண்டிருக்கின்றான்.

ஆங்கிலக் கல்வியின் அறிவின்றி, இன்றைய காலகட்டத்தில் பயணிப்பது சிரமமான விடயமாகும். உலகளாவிய தொழில் வாய்ப்புகள் ஆங்கில அறிவை மையப்படுத்தும் விதத்திலேயே காணப்படுகின்றன.

உலகில் உள்ள பல்வேறு வணிக நிறுவனங்கள், ஆங்கில அறிவை பிரதான திறனாகக் கொண்டே, தமது நிறுவனத்துக்கான ஓர் ஊழியரை தெரிவு செய்கிறது. ஆங்கில மொழியானது, சர்வதேசத்தின் பொது மொழியாக காணப்படுவதால், அனைவரது வாழ்வின் வெற்றிக்கும் உயர்வுக்கும் ஆங்கிலக் கல்வி முக்கியமானதாகும்.

இன்றைய உலகின் விஞ்ஞான வளர்ச்சியோடு சமமாக நடைபோட வேண்டுமானால், ஆங்கில அறிவுடன் கூடிய கணினி அறிவும் கட்டாயம் ஆகும்.

மொழி என்பது தொடர்பாடலுக்கு அவசியமான ஒன்றாகும். அதன் அடிப்படையில், தனிமனிதன் ஒருவன், மொழி அறிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கருத்துகளின் பரஸ்பர பரிமாற்றம் மொழியில்தான் தங்கியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில், ஆங்கில கல்வியானது கல்வி நிர்வாக சேவைகளில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. விரும்பியோ விரும்பாமலோ ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் ஏதாவொரு வகையில் கற்பிக்கப்பட்டும், கையாளப்பட்டும் வருகின்றது. சில நாடுகளில் ஆங்கிலமானது தாய் மொழியாகவும் வேறு சில நாடுகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகவும் பேசப்பட்டும் வருகிறது.

உலகமயமாக்கல் நிகழும் இக்காலச் சூழ்நிலையில், பாமர மக்களும் ஆங்கில அறிவை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகிறது. இலங்கை நாட்டை பொறுத்தவரையில் வேலையில்லா பிரச்சினை என்று கூறப்படும் வாதத்திற்கு, ஆங்கில மொழி கூட ஒரு மருந்தாகலாம்.

ஆங்கில மொழியில் தேர்ச்சி, அறிவாற்றல் அதிகரிக்குமானால் எந்தவொரு சூழ்நிலையிலும்

> **ஆங்கில மொழியில் ஒருவர் சிறப்பு தேர்ச்சி பெற்றிருப்பாராயின் அவருடைய தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல், தலைமைத்துவ பண்புகள், ஆளுமைப் பண்புகள் இயல்பாகவே வளர்ச்சியடையும்**

நம்பிக்கையோடு நிறுவனங்களிலும் மற்றும் வேலை செய்யும் இடங்களிலும் வேலை செய்ய மக்கள் முன் வருவார்கள். மேலும், வெளிநாடுகளுக்கு செல்வதன் மூலமும் தரமான, சிறப்பான வேலைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும். இந்த நிலையில், இலங்கை சிறந்த அன்னிய செலாவணியை கூட பெற்றுக் கொள்கின்ற வாய்ப்பு உள்ளது.

ஆங்கில மொழியில் ஒருவர் சிறப்பு தேர்ச்சி பெற்றிருப்பாராயின் அவருடைய தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல், தலைமைத்துவ பண்புகள், ஆளுமைப் பண்புகள் இயல்பாகவே வளர்ச்சியடையும்.

அவற்றைவிட, ஒரு கடையிலோ அல்லது பொது இடங்களிலோ என எங்கு சென்றாலும் தற்காலத்தில் அதிகம் ஆங்கில வார்த்தைப் பிரயோகங்களே பயன்பாட்டில் உள்ளன. ஆகவே, ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பானாயின் அவன் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளக் கூடிய வகையில் பலம்மிக்க ஒருவனாக தற்காலத்தில் திகழ்கின்றான்.

சிறுவயது கல்வி தொடக்கம் பாடசாலை கல்வி, பல்கலைக்கழக கல்வி என அனைத்து மட்டங்களிலும் ஆங்கில மொழியில் சிறப்பு பெற்றிருக்க வேண்டும். தற்காலத்தில் வாழும் சாதாரண மனிதன் பொது அறிவு நிறைந்தவனாக இருக்க வேண்டும். அந்த வகையில், ஆங்கில பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் சிறந்த பொது அறிவைத் தருகின்றன.

ஒவ்வொரு துறையிலும் ஆங்கிலத்தின் பங்கு காணப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் தாய்மொழி பிரதான மொழியாக இருந்தாலும்டு அதனோடு இணைந்தவாறு ஆங்கில மொழியும் பிரதான இடம் வகிக்கின்றது.

இனிவரும் காலங்களில், ஆங்கில மொழி அறிவின்றி எமது வாழ்க்கையை நகர்த்திச் செல்வது கடினமாக காணப்படும். ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளிடத்தில் ஆங்கில மொழியைப் பயிற்றுவிப்பதில் அக்கறையோடு செயற்பட வேண்டும். சில பெற்றோர்களின் கவனயீனத்தாலும் அக்கறையின்மையாலும் மாணவர்கள் பலர் ஆங்கில மொழியில் விருப்பமின்றி,

> **இனிவரும் காலங்களில், ஆங்கில மொழி அறிவின்றி எமது வாழ்க்கையை நகர்த்திச் செல்வது கடினமாக காணப்படும். ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளிடத்தில் ஆங்கில மொழியைப் பயிற்றுவிப்பதில் அக்கறையோடு செயற்பட வேண்டும்**

வெறுப்புற்று காணப்படுவதை கண்முன்னே காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் இடம்பெறாமல் தடுக்க வேண்டும். தரமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பாடசாலைகளில் நியமிப்பது மட்டுமல்லாமல், தெளிவாகக் கற்பிக்கக் கூடிய வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து உருவாக்கவும் வேண்டும்.

கல்வி பொது தராதர பரீட்சை சித்தி வீதத்திற்காக மட்டும் ஆங்கில மொழியை மாணவர்களுக்கு திணிக்காது, அவர்கள் தமது எதிர்கால வாழ்க்கைச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில், அவர்களது ஆங்கில அறிவை தரம் ஒன்றிலிருந்து மேம்படுத்திக் கொண்டு வருதல் வேண்டும். கணிசமானவர்களுக்கு இதுவரை காலமும் ஆங்கில அறிவில் ஏற்பட்ட அலட்சியம், இனிவரும் காலங்களில் ஏற்படாமல் இருக்க வேண்டும்.

ஆங்கில மொழியின் அவசியத்தை, குறிப்பாக கிராமப்புற மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்களுடைய பிள்ளைகளின் எதிர்கால கல்வி வாழ்க்கையில் அதாவது பட்டப்படிப்பு வாழ்க்கையில், ஆங்கிலக் கல்வியானது அதிக முக்கியத்துவம் செலுத்துகின்றது.

இலங்கையில் ஆங்கிலக் கல்வி அறிவு, கிராமப்புறங்களில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. நகர்ப்புறங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிராமப்புற மக்களின் ஆங்கில கல்வியில் முன்னேற்றம் இருத்தல் வேண்டும். ஆங்கில கல்வியில் பின்தங்கிய தன்மையில் உள்ள மாணவர்கள் அதிலிருந்து மீண்டு ஆங்கிலக் கல்வி அறிவைப் பெற்று அவர்களுக்குரிய வாய்ப்புகளைத் தேடி, ஆங்கிலக் கல்வி மூலம் அவர்களின் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

அண்மைக்காலங்களில் அரச பாடசாலைகளில் வாரத்திற்கு ஒரு தினம் அனைத்துத் தொடர்பாடல் நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் இடம்பெற வேண்டும் என்ற திட்டம், அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டது. அத்திட்டத்தை திறம்படச் செய்ய ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டது. உண்மையில் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை, வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இதன் ஊடாக, ஆங்கில மொழி விருத்தியின் பொருட்டு, இலங்கை அரசாங்கத்தால் கரிசனை காட்டப்படுகிறது என்பதே உண்மையாகும். அரசாங்கத்தால் பல்வேறு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டாலும், மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவு மட்டும் கீழ்நிலையிலே உள்ளது. எனவே, இந்நிலை மாற வேண்டும். மாணவர்கள் மட்டுமின்றி ஏனையோரும் இவ்வுலகில் ஆங்கில அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். தற்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து, அதற்கேற்ப செயற்படுவார்களாயின் ஏதோ ஒரு விதத்தில் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# சிறந்த முகாமையாளர்களை கொண்ட நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ்

யூனியன் அஷ்யூரன்ஸ், பெருமைக்குரிய சிறந்த முகாமையாளர் விருதுகள் 2023 இல் உயர் கௌரவிப்புகளை பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

*CLA Coaching & Consulting Inc.* இனால் *Colombo Leadership Academy* உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, மக்கள் முகாமைத்துவத்தில் சிறந்த அடையாளமாக அமைந்திருப்பதுடன், சிறந்த தலைமைத்துவ செயற்பாடுகள், ஊழியர்கள் விருத்தி, மேம்பாடு, சிறந்த பெறுபேறுகளை கட்டியெழுப்புவது போன்றவற்றில் சிறந்த செயற்பாடுகளை பேணும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தது.

தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக, சிறந்த முகாமையாளர்களுடனான நிறுவனம் எனும் உயர் விருதை யூனியன் அஷ்யூரன்ஸ் பெற்றுக் கொண்டது. தமது ஊழியர்களின் விருத்தியில் நீண்ட கால அடிப்படையிலான முதலீடுகள் மற்றும் சிறந்த தலைமைத்துவம், முகாமைத்துவ பண்புகளை கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் யூனியன் அஷ்யூரன்ஸின் அர்ப்பணிப்பை உறுதி செய்யும் வகையில் இந்த விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், நிறுவனத்தின் ஏழு சிறந்த முகாமையாளர்கள் அவர்களின் ஒப்பற்ற வினைத்திறனுக்காக கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்களில், பெறுபேறுகள் மற்றும் நிறைவேற்றல் சிறப்புக்கான சிறந்த முகாமையாளர்கள் பிரிவில் தமித விக்கிரமதுங்க, திலுக்ஷன் டி சில்வா ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் சிறந்த தலைமைத்துவத் திறன்கள், தந்திரோபாயச் சிந்தனை, சிறந்த பெறுபேறுகளை எய்துவதற்கான அர்ப்பணிப்பு போன்றன ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், கொண்டாடப்பட்டிருந்தன. வளர்ச்சிக்காக ஏனையவர்களை பயிற்றுவித்தலுக்குரிய சிறந்த முகாமையாளர்கள் பிரிவில் லச்சினி சித்ரசேன, நயன விதானவசம் ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தமது அணி




அங்கத்தவர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி, வலுச் சேர்ப்பதில் தமது சிறந்த ஆற்றல்களை இவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். அணி வினைத்திறன் மற்றும் கைகோர்ப்புக்கான சிறந்த முகாமையாளர் பிரிவில் இமந்திகா ரணவீர, தஹாமி பத்திரன, சமிந்த எதிரிசிங்க ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், குழுநிலைச் செயற்பாடுகள் மற்றும் கைகோர்ப்பு ஆகியவற்றில் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தனர்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “சிறந்த முகாமையாளர் விருதுகளில் வெற்றியீட்டிய அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறந்த தலைமைத்துவம் மற்றும் திறமையான பணியாளர் குழுவைக் கட்டியெழுப்புவதில் எமது ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இந்தச் சாதனைகள் அமைந்துள்ளன. பெறுபேறுகளை எய்துதல், வளர்ச்சியை ஊக்குவித்தல், தமது அணிகளுடன் கைகோர்த்து செயலாற்றும் பண்பை கட்டியெழுப்பல் போன்றவற்றுக்கான தமது ஆற்றலை எமது முகாமையாளர்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளனர். சிறந்த முகாமையாளர்களுடனான நிறுவனம் எனும் தொடர் கௌரவிப்பை யூனியன் பெற்றுக் கொண்டுள்ளதனூடாக, உயர் வினைத்திறன் வாய்ந்த பணியாளர்களில் முதலீடுகளை மேற்கொள்வதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன், சிறந்த மக்கள் முகாமைத்துவ தந்திரோபாயங்களையும் உணர்த்துகின்றது. எமது ஊழியர்களுக்கு முன்னேற்றகரமான சூழலை ஏற்படுத்துவதில் நாம் தொடர்ந்தும் பங்களிப்பு வழங்குவதுடன், துறையில் தெரிவுக்குரிய தொழில் வழங்குநர் எனும் எமது நிலையை மேலும் உறுதி செய்வதாகவும் அமைந்திருக்கும்” என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் அனீஃவ் கருத்துத் தெரிவிக்கையில், “எமது சிறந்த சொத்தாக எமது ஊழியர்கள் அமைந்துள்ளனர் என்பதில் யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த நாம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம், அவர்களுக்கு கைகொடுக்கும் மற்றும் வலுவூட்டும் பணியிடச்சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் எமது அர்ப்பணிப்புக்கு கிடைத்த ஆதாரமாக இந்த விருதுகள் அமைந்துள்ளன. தலைமைத்துவ சிறப்புசார் கலாசாரத்தை ஊக்குவிப்பதாக இந்தக் கௌரவிப்புகள் அமைந்திருப்பதுடன், ஈடுபாட்டுடனான பணியாளர் குழுவை கட்டியெழுப்புவதற்கான எமது அர்ப்பணிப்பை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது. எமது முகாமையாளர்களின் சாதனைகளையும், அவர்களின் சிறந்த தலைமைத்துவத்தையும் நாம் கொண்டாடுவதுடன், எமது தொடர்ச்சியான வெற்றிகரமான செயற்பாடுகளில் முக்கிய பங்களிப்பையும் ஆற்றியுள்ளது” என்றார்.

# ‘செலான் பஹசர’ நூலக திட்டத்தின் 225 ஆவது மைல்கல்

செலான் வங்கி, தனது தூர நோக்குடைய பரந்த சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்களினூடாக, மில்லியன் கணக்கான இலங்கையர்களை சென்றடைந்துள்ளது. ஒரு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட செலான் பஹசர திட்டத்தினூடாக, நாடளாவிய ரீதியில் பின்தங்கிய பாடசாலைகளில் நூலகங்களை நிறுவும் திட்டத்தில், 225 ஆவது நூலகம் அண்மையில், மஹரகம, தர்மாசோக ஆரம்ப பாடசாலையில் திறந்து வைக்கப்பட்டது. செலான் வங்கியின் 25 வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை நூலகங்கள் நிறுவும் திட்டம், தற்போது, வங்கி தனது 35 வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் நிலையில், இந்த 225 ஆவது நூலகத்தை திறந்துள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த நூலகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில், செலான் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன, பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர, பிரதம நிதி அதிகாரி சம்பிகா தொடம்வல ஆகியோருடன், பிரதேசக் கல்வி பணிப்பாளர் தினேஷிகா குணரட்ன, தர்மசோக ஆரம்ப பாடசாலையின் அதிபர் சிந்தா பெரேரா மற்றும் உப, பிரதி அதிபர்களும் கலந்து கொண்டனர். பாடசாலையின் 110 வருட பூர்த்தி தினத்தன்று இந்த நூலக அன்பளிப்பு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடவிதானம் மற்றும் இணைந்த பாடவிதானம் ஆகியவற்றுடன் இணைந்த கல்வித் தரத்தை மேம்படுத்துவதனூடாக, இளம் சிந்தனையாளர்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் செலான் பஹசர நிறுவப்பட்டிருந்தது. இளம் பராயத்தினர் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருப்பதுடன், தமது கல்வியை சீராகத் தொடர்வதற்கும், எதிர்காலத்தில் எழக்கூடிய சவால்களுக்கு நம்பிக்கையுடன் திடமாக முகங்கொடுக்கக்கூடியவர்களாக அவர்களை தயார்ப்படுத்துவதற்கு உதவும் வகையிலும் அமைந்துள்ளது. தரமான கல்வி என்பதில், நிலைபேறான அபிவிருத்தி



இலக்குகளை உள்வாங்கி (இலக்கு 4), வழங்கியிருந்த வாக்குறுதிக்கமைய 225 நூலகங்களை வங்கி வெற்றிகரமாக நிறுவியுள்ளதுடன், அவற்றில் கணினிகள் மற்றும் மல்டிமீடியா புரொஜெக்டர்கள் ஆகியவற்றையும் நிறுவியுள்ளது. தரமான பயிலலுக்கு அவசியமான புத்தகங்கள், மெய்நிகர் புத்தகங்களையும் வழங்கி, பாடவிதானம் மற்றும் இணைந்த பாடவிதானம் ஆகியவற்றை ஏற்படுத்தி உள்ளது.

வங்கியின் நிலைபேறான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முக்கிய பங்களிப்பை வழங்கும், செலான் வங்கியின் பிரதம நிதி அதிகாரி சம்பிகா தொடன்வெல கருத்துத் தெரிவிக்கையில், “மக்களின் மனங்களில் உறுதியான மற்றும் நன்மதிப்பைப் பெற்ற கூட்டாண்மை நிறுவனமாக செலான் வங்கி, தன்னை தரமுயர்த்தியுள்ளது. அடுத்த தலைமுறையினருக்கான எமது கனவுகளின் வெளிப்பாடாக, ‘செலான் பஹசர’ அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. கல்வியறிவை மேம்படுத்துவதுடன், மாணவர்களுக்கு தமது கனவுகளை கட்டமைத்துக் கொள்வதற்கு வழிகாட்டும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. சிறுவர்கள் மத்தியில் இளம் வயதிலிருந்து வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. எதிர்காலத்தின் முன்னேற்றப் பயணத்தில், கல்வியறிவு என்பது முக்கிய இடம்பெறும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். எதிர்காலத் தலைவர்களுக்கு கல்வி மற்றும் பயிலலுக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதையிட்டும், எதிர்காலத் தலைமுறையினரின் திறமைகளை வெளிக் கொணர்வதில் பங்காற்றுவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். எமது ஊழியர்களையும் அனுகூல பாடசாலைகளின் அதிகாரிகளையும் ஒன்றிணைத்து, சமூகத்தில் பயனுள்ள பங்களிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருந்தமை விசேட அம்சமாகும்” என்றார்.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல், செலான் வங்கியின் ஊழியர்கள், தம்மை இந்தத் திட்டத்துக்கு அர்ப்பணித்திருந்தனர். பாடசாலை நிர்வாகத்தினர், பெற்றோர், மாணவர்கள், கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் மற்றும் உயரதிகாரிகளை ஈடுபடுத்தும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருந்தது. சமூகப் பொறுப்புணர்வுத் திட்டம் எனும் வகையில், ‘செலான் பஹசர’ என்பது, பணிப்பாளர் சபையின் தொடர்ச்சியான மீளாய்வு மற்றும் கடும் வழிகாட்டுதல்களால் முறையாக நிர்வகிக்கப்பட்டிருந்ததுடன், அதன் உச்சப்பயன் மாணவர்களைச் சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வொஷிங்டன்:

# மோடி கொடுத்த பரிசு

வொஷிங்டன் வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது மழை பெய்ததை சுட்டிக் காட்டிய பிரதமர் மோடி தனது ட்விட்டரில் இந்திரனின் வரவேற்புடனும், இந்திய சமூகத்தினரின் வரவேற்புடன் பொஷிங்டன் வந்தடைந்தேன் என்று பதிவிட்டிருந்தார்.

பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஏற்பாடு செய்திருந்த விருந்த நிகழ்ச்சிக்கு சென்றிருந்த அவரை ஜனாதிபதி ஜோ பைடனும் அவரது மனைவி ஜில் பைடனும் வரவேற்றனர்.

அதிபர் ஜோ பைடனுக்கு உபநிஷத புத்தகங்கள், சந்தனப் பேழை ஆகியனவற்றையும்,



ஜனாதிபதி மனைவி ஜில் பைடனுக்கு வைரக்கல்லையும் பிரதமர் மோடி வழங்கினார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நவம்பர் மாதம் 81 வயதாகிறது. இதனை ஒட்டி அவருக்குப் பரிசாக நுணுக்கமான வேலைப்பாடு நிறைந்த ஒரு சந்தனப் பேழையை பிரதமர் மோடி பரிசாக வழங்கியுள்ளார். அதனுள் ஒரு வெள்ளியிலான விநாயகர் சிலை, வெள்ளி விளக்கு இருந்தன.

அந்தப் பேழைக்குள் 'தஸ் தனம்' எனப்படும் பரிசும் இருந்தது. இது ஒரு நபர் தனது 80 வயதை பூர்த்தி செய்யும்போது வழங்கப்படுவதாகும். ஒருவர் 80 வயது 8 மாதங்களை பூர்த்தி செய்யும்போது 1000 முழு நிலவுகளைக் கண்டவராவார். இதனை 'த்ரிஷ்ட சஹஸ்ரசந்திரோ' என்று குறிப்பிடுவர். இதனையொட்டி பைடனுக்கான பரிசுகளை பிரதமர் மோடி தெரிவு செய்து வழங்கியுள்ளார். அத்துடன் உபநிஷத கொள்கைகளின் 10 கோட்பாடுகள் அடங்கிய நூலின் முதல் அச்சுப் பதிப்பையும் வழங்கினார்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# வாரயிறுதிப் போட்டிகள்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், பல்லேகலவில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சென். அந்தனிஸ் கல்லூரியும் டி.எஸ். சேனநாயக்க கல்லூரியும் மோதவுள்ளன.

இதேவேளை, சென், தோமஸ் கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் அவ்வணியை இசிப்பத்தன கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில், றோயல் வளாகத்தில் நடைபெறவுள்ள போட்டியில் வெஸ்லி கல்லூரியை சென். ஜோசப் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை, விஞ்ஞானக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் அவ்வணியை றோயல் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

போகம்பரவில் நடைபெறவுள்ள போட்டியில் தர்மராஜ கல்லூரியை சாஹிரா கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில், போகம்பரவில் நாளை மறுதினம் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வித்தியார்த கல்லூரியை திருத்துவக் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

வடகொரிய மக்கள்

# பட்டினியால் மடிகின்றனர்



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரியைப் போல் தான் நடந்து கொள்கிறார். வடகொரியாவில் உண்மையில் என்ன நடக்கிறது என்பது வெளி உலகிற்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் குறிப்பிட்ட நாட்கள் இடைவெளியில் அணுஆயுத ஏவுகனை சோதனை நடைபெறுவதாக மட்டும் செய்திகள் வெளிவரும். வடகொரியாவைப் பற்றி ஒரு செய்தி வெளி வருகிறது என்றால் அது ஏவுகனை சோதனை பற்றியதாகத் தான் இருக்கும்.

அந்த நாட்டு மக்கள் எப்படி வாழ்கிறார்கள்?, அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கின்றனவா? அவர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்களா என எதையும் மற்றவர்கள் தெரிந்து கொள்ள முடியாது.

வடகொரியாவில் சின்ன சின்ன விதி மீறல்களுக்கு கூட மரண தண்டனை தான். அரசின் செயல்பாடுகளையோ, அதிபரையோ எதிர்த்து ஒரு கேள்வி கேட்டுவிட முடியாது. அப்படி கடுமையான கட்டுப்பாடுகள். அப்படிப்பட்ட வடகொரியாவில் பொதுமக்கள் படும் பாடு கொஞ்சம் நஞ்சமல்ல.

வடகொரியாவில் மிக கடுமையான உணவு தட்டுப்பாடு நிலவுவதாகவும், போதுமான உணவு கிடைக்காமல் அந்நாட்டில் தினமும் உயிரிழக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. வடகொரியாவில் வசிக்கும் இரண்டரை கோடி மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்களை சொந்த நாட்டிலேயே உற்பத்தி செய்யவும் இல்லை என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வொஷிங்டன்

# எலிகளை பிடிக்க பூனை நாய்களுக்குப் பயிற்சி

அமெரிக்காவின் தலைநகரமான வொஷிங்டன் இப்போது புதுவிதமான தொல்லை ஒன்றை சந்தித்து வருகிறது. அந்த நகரத்தில் எலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அவற்றை கட்டுப்படுத்த வொஷிங்டன் நகர நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்காவில் எலிகளால் அவதிப்படும் ஐந்து மாவட்டங்களில் கொலம்பியா முதல் இடத்தில் உள்ளது. தற்போது தலைநகர் வாஷிங்டன்னிலும் எலிகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

அந்த எலிகள் உணவுப் பண்டங்களில் வாய் வைத்து விடுவதால் ஏராளமான



உணவுப் பொருட்கள் வீணாகி வருகின்றன. எலிகளை கட்டுப்படுத்த எத்தனையோ முயற்சிகளை எடுத்தும் பலனளிக்காததால் இப்போது வவெஷிங்டன் நகரில் எலிகளை வேட்டையாட முதுமையான முறை ஒன்றை கடைப்பிடிக்கிறார்கள். எலிகளை வேட்டையாட பயிற்சி அளிக்கப்பட்ட நாய்கள் மற்றும் பூனைகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

சென்னை

# பணத்துக்குப் பின் கார்ட் வராததால் ஆவேசம்

வங்கியொன்றின் தன்னியக்க இயந்திரத்தில் பணத்தை பெற்றுக்கொண்ட நபரொருவர், பணம் வந்ததன் பின்னர், கார்ட் வெளியே வராததால் அந்த இயந்திரத்தை அடித்து நொறுக்கிய சம்பவமொன்று சென்னை கோயம்பேட்டில் இடம்பெற்றுள்ளது.

ஏடிஎம்மின் மையத்திலிருந்த சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தபோது, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் ஏடிஎம் மையத்துக்கு வந்து பணத்தை எடுத்துள்ளார். பின்னர் ஏடிஎம் கார்டை எடுக்கும் போது மிஷினில் சிக்கிக்கொண்டதால் ஆத்திரமடைந்த அந்த நபர்



இயந்திரத்தை உடைத்துவிட்டு சென்றது விசாரணையில் தெரியவந்தது.

ஏடிஎம் இயந்திரத்தில் இருந்து பணம் எதுவும் திருடப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் சிசிடிவி காட்சிகளில் பதிவான அடையாளங்களை வைத்து மர்ம நபரை தேடி வருகின்றனர்.

ஆத்தூர்

# கணவன் வீட்டு முன்பு மனைவி : காவல் நிலையத்தில் கணவன்

சேலம் மாவட்ட, ஆத்தூர் அருகே உள்ள விநாயகபுரம் முத்துமாரியம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்தவர் 23 வயதான நபர், கோவையில் தங்கி எம்பிஏ படித்து வந்தார். .சென்னை தரமணியை சேர்ந்த 23 வயதான பெண் சென்னையில் பிகாம் படித்து வந்தார் .

இவருக்கும் இடையில் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளம் மூலம் பழக்கம் ஏற்பட்டு காதல் மலர்ந்தது. இதன் தொடர்ச்சியாக இருவரும் மேற்படிப்புக்காக திருச்சியில் ஒரே வீட்டில் தங்கி இருந்து படித்து வந்தனர் .

இந்த நிலையில் கடந்த ஆண்டு முதல் அந்த நபர் திருச்சிக்கு செல்லவில்லை. மேலும் மாணவியை தொடர்பு கொள்வதுமில்லை.

இதனால் காதலரை தேடி மாணவி சேலத்துக்கு வந்தார். கடந்த மூன்று



ஆண்டுகளாக காதலித்து வந்தேன் .எங்களுக்கு திருமணம் வையுங்கள் என புகார் மனு கொடுத்தார். இருவரையும் அழைத்த பொலிஸார், சமரசப்படுத்தி திருமணம் செய்துவைத்தனர்.

இந்நிலையில், மனைவியை விட்டு விட்டு கணவன், சென்னைக்கு திரும்பிவிட்டார். மனைவியை பார்க்கக்கூட செல்வதில்லை. இதனையடுத்து, கணவனின் வீட்டுக்கு முன்பாக மனைவி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். தன்னை கட்டாயப்படுத்தியதால் தாலி கட்டியதாக தெரிவித்த கணவன், அப்பெண்ணுடன் வாழமுடியாது என்று பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

றியல் மட்ரிட்டுடன்

# ஓராண்டு ஒப்பந்த நீடிப்பில் கைச்சாத்திட்ட க்றூஸ்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான டொனி க்றூஸ், கழகத்துடன் ஓராண்டு ஒப்பந்த நீடிப்பில் கைச்சாத்திட்டுள்ளார்.

அந்தவகையில் அடுத்த பருவகால முடிவு வரையில் மட்ரிட்டில் 33 வயதான க்றூஸ் தொடரவுள்ளார்.



30 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு

# கொவாசிச்சை செல்சியிலிருந்து கைச்சாத்திட இணங்கிய சிற்றி

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியில் இணைவதை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியின் மத்தியகளவீரர் மட்டியோ கொவாசிச் நெருங்கியுள்ளார்.

செல்சியுடன் 30 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் வரையான ஒப்பந்தத்துக்கு செல்சியுடன் சிற்றி இணங்கியுள்ள நிலையிலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது.


ஆரம்பத்தில் 25 மில்லியன் ஸ்டேர்லிங்க்



பவுண்ஸ்களுக்கு சிற்றியில் இணையவுள்ள 29 வயதான கொவாசிச், ஐந்து மில்லியன் ஸ்டேர்லிங்க் பவுண்ஸ்கள் பெறுபேறு தொடர்பான மேலதிக தொகையைக் கொண்டிருக்கிறார்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# அயர்லாந்தை வென்ற ஸ்கொட்லாந்து



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அயர்லாந்துடனான போட்டியில் ஸ்கொட்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஸ்கொட்லாந்து

அயர்லாந்து: 286/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: கேர்ட்டிஸ் கம்பர் 120 (108), ஜோர்ஜ் டொக்ரல் 69 (93) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரண்டன் மக்முல்லன் 5/34, கிறிஸ்டோபர் மக்பிரைட் 1/24 மார்க் வாட் 1/52, கிறிஸ் சோல் 1/61)

ஸ்கொட்லாந்து: 289/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிஷெல் லீஸ்க் ஆ.இ 91(61), கிறிஸ்டோபர் மக்பிரைட் 56 (60), மார்க் வாட் 47 (43) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 3/57, ஜோர்ஜ் டொக்ரல் 2/34, ஜொஷ் லிட்டில் 2/73, கேர்ட்டிஸ் கம்பர் 1/39, பென் வட் 1/59)

போட்டியின் நாயகன்: மிஷெல் லீஸ்க்

இந்நிலையில், இன்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு பி போட்டியொன்றில் ஓமானை இலங்கை எதிர்கொள்ளவுள்ளதுடன், இன்னொரு போட்டியில் ஐக்கிய அரபு அமீரகத்தை ஸ்கொட்லாந்து எதிர்கொள்கிறது.

துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய றூட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு றூட் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 164 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஆறாமிடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை றூட் அடைந்துள்ளார்.

இப்போட்டியில் 206 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் உஸ்மான் கவாஜா, ஒன்பதாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. கேன் வில்லியம்ஸன், 3. மர்னுஸ் லபுஷைன், 4. ட்ரெவிஸ் ஹெட், 5. பாபர் அஸாம், 6. ஸ்டீவ் ஸ்மித், 7. உஸ்மான் கவாஜா, 8. டரைல் மிற்செல், 9. திமுத் கருணாரத்ன, 10. றிஷப் பண்ட்.

இந்நிலையில் குறித்த டெஸ்டில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் ஒலி றொபின்ஸன், ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தை அடைந்துள்ளார்.

இதே போட்டியில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் நேதன் லையன், ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை



பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. ஜேம்ஸ் அன்டர்சன், 3. ககிஸோ றபாடா, 4. பற் கமின்ஸ், 5. ஒலி றொபின்ஸன், 6. நேதன் லையன், 7. ஷகீன் ஷா அஃப்ரிடி, 8. ஜஸ்பிரிட் பும்ரா, 9. இரவீந்திர ஜடேஜா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. அக்ஸர் பட்டேல், 5. பென் ஸ்டோக்ஸ்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 23 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.